நமக்கு நாமே திட்டம் – 2008–09 சென்னை மாநகராட்சியால் பயன்படுத்தாது திருப்பி செலுத்தப்பட்ட ரூ.196.67 இலட்சத்தை, கூடுதல் நிதி தேவைப்படும் மாவட்டங்களுக்கு நமக்கு நாமே திட்டப் பணிகளை மேற்கொள்ளும் பொருட்டு மறு ஒதுக்கீடு செய்து வழங்க ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையருக்கு அனுமதி அளித்து ஆணை வெளியிடப்படுகிறது.

---

**ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (மா.அ.தி.1) துறை**

அரசு ஆணை (1D) எண். 143 நாள்: 12.3.2009.

படிக்கப்பட்டவை:

1. அரசாணை (நிலை) எண்.87, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை, நாள் 5.6.2008.
2. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையரின் கடித எண்.68932/08/ என்இடிஎம்–2, நாள் 24.2.2009.

* * * * *

**ஆணை:**

படிக்கப்பட்டவை ஒன்றில் காணும் அரசாணையில் “நமக்கு நாமே திட்டத்தினை” 2008–09ஆம் ஆண்டில் செயல்படுத்துவது குறித்த விரிவான வழிகாட்டு நெறிமுறைகளும் மற்றும் 2008–09ஆம் ஆண்டிற்கு இத்திட்டத்திற்காக ரூ.50 கோடி நிதியை அனுமதித்தும் ஆணை வெளியிடப்பட்டது.

2. படிக்கப்பட்டவை இரண்டில் காணும் கடிதத்தில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர், நமக்கு நாமே திட்டத்தின் கீழ் 2008–09ம் ஆண்டிற்கு தங்கள் மாவட்டங்களுக்கு ஒதுக்கப்பட்ட தொகை முழுவதுமாக பயன்படுத்தப்பட்டுவிட்டதால் கூடுதல் தொகையை விடுவிக்க சில மாவட்ட ஆட்சித்தலைவர்கள் கோரியுள்ளார்கள் என்றும் அக்கூடுதல் தொகைக்கு ஏற்ப பொதுமக்களின் பங்களிப்பும் பெறப்பட்டுள்ளது என்றும் அவர்கள் தெரிவித்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார். மேலும், சென்னை மாநகராட்சிக்கு நமக்கு நாமே திட்டத்தின் கீழ் 2008–09ம் ஆண்டிற்கு ஒதுக்கப்பட்ட ரூ.276.012 இலட்சத்தில், தற்போது ரூ.196.67 இலட்சங்கள் பயன்படுத்தப்படாது திருப்பி செலுத்தப்பட்டுள்ளது என்றும், 2008–09ம் ஆண்டில் நமக்கு நாமே திட்டத்தின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை முழுவதுமாக பயன்படுத்தப்பட்டு தற்போது கீழ்கண்ட 4 மாவட்டங்களுக்கு கூடுதலாக நிதி தேவைப்படுகிறது என்றும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் தெரிவித்துள்ளார்.

| வ. எண். | மாவட்டம் | சேகரிக்கப்பட்ட தொகை (ரூ. இலட்சத்தில்) | தேவைப்படும் கூடுதல் நிதி (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1. | நாகப்பட்டினம் | 51.50 | 100.00 |
| 2. | விழுப்புரம் | 17.00 | 34.00 |
| 3. | திருநெல்வேலி | 67.54 | 91.45 |
| 4. | சிவகங்கை | 5.72 | 9.43 |
| | **மொத்தம்** | **141.76** | **234.88** |

இந்நிலையில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர், நமக்கு நாமே திட்டத்திற்காக, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையரகத்தில் வைக்கப்பட்டிருந்த தொகையும் முழுமையாக பயன்படுத்தப்பட்டுவிட்டது என்பதால், சென்னை மாநகராட்சியால் தற்போது பயன்படுத்தாது திருப்பி செலுத்தப்பட்ட ரூ.196.67 இலட்சத்தினை, கூடுதலாக நிதி தேவைப்படும் மாவட்டங்களுக்கு மறு ஒதுக்கீடு செய்ய ஆணை வெளியிடுமாறு அரசை கேட்டுக்கொண்டுள்ளார். மேலும், படிக்கப்பட்டவை ஒன்றில் உள்ள அரசாணையில் பத்தி 8 (i) (ஆ)–ல் ''தேவைப்படின், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அரசுச் செயலாளருடன் கலந்து ஆலோசித்து பிப்ரவரி 28–ஆம் தேதி அன்று உள்ள நிலவரப்படி, மாவட்டங்களில் இத்திட்டத்தின் கீழ் பணிகளுக்காக ஒதுக்கப்படாமல் உள்ள தொகையை, திட்ட செயல்பாடுகள் நன்றாக உள்ள மற்றும் திட்டங்களை செயல்படுத்த நிதி அதிகமாக தேவைப்படும் மாவட்டங்களுக்கு மறு ஒதுக்கீடு செய்து வழங்கஅதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது'' என்றும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் தெரிவித்துள்ளார்.

3. மேலே பத்தி 2–ல் உள்ள ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையரின் கருத்துருவினை அரசு கவனமாக பரிசீலனை செய்து ஏற்றுக் கொண்டுள்ளது. அதன்படி நமக்கு நாமே திட்டத்தின் கீழ் 2008–09ஆம் ஆண்டிற்கு சென்னை மாநகராட்சிக்கு ஒதுக்கப்பட்ட தொகையில் பயன்படுத்தாது திருப்பி செலுத்தப்பட்ட தொகையான ரூ.196.67 இலட்சத்தை, இத்திட்டத்தின் கீழ் தங்கள் மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட தொகை முழுவதுமாக பயன்படுத்தப்பட்டு, தற்போது கூடுதல் நிதி கோரும் மாவட்டங்களுக்கு மறு ஒதுக்கீடு செய்ய ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையருக்கு அனுமதி அளித்து அரசு ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**க. அஷோக் வர்தன் ஷெட்டி,**
அரசு முதன்மைச் செயலாளர்.